**சுருக்கம்**

சிலை அமைத்தல் – நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வேதாரண்யம் நகராட்சியில், இராஜாஜி பூங்காவில் தந்தை பெரியாரின் வெண்கலத்தினாலான முழு உருவச் சிலை நிறுவ அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை(நிலை) எண்.14 நாள் 22.1. 2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998.

மேலும் படிக்க:

2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க. எண். 40986/ 2007/ சி2, நாள் 28.2.2009 மற்றும் 9.7.2009.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந. க. எண். 23766/ 2009/ எம்.1, நாள் 28.8.2009.

-----

**ஆணை:**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், மற்றும் நகரத்தில், மேலவீதியில் உள்ள இராஜாஜி பூங்காவில் தந்தை பெரியாரின் முழு உருவ வெண்கலத்தினாலான சிலை வைக்க அனுமதியினை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், வேதாரண்யம் நகராட்சி, நகர்மன்ற தலைவருமான, திரு.மா. மீனாட்சி சுந்தரம், என்பவரால் 27.12.2006 தேதிய தீர்மானம் எண்.35–ல் நகர்மன்ற கூட்ட நடவடிக்கையில் தீர்மானிக்கப் பட்டதைத் தொடர்ந்து, மேற்படி சிலையினை அமைக்க அனுமதி கோரப்பட்டது எனவும், இது குறித்து நாகப்பட்டினம், காவல் கண்காணிப்பாளர் அவர்கள், வேதாரண்யம் நகராட்சி பூங்காவில் தந்தை பெரியார் சிலை வைக்க அனுமதி வழங்க பரிந்துரை செய்துள்ளதாகவும், நாகப்பட்டினம், வருவாய் கோட்ட அலுவலர், சிலை அமைக்க இருக்கின்ற இடம் வேதாரண்யம் பட்டினம் கிராம கணக்கில் புல எண்.175/280–ல் 0.23.5 இராஜாஜி பூங்கா அமைந்துள்ளது எனவும், அந்த பூங்காவில் வடகிழக்கு மூலையில்

உட்புறத்தில் அமைக்க வேதாரண்யம் நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி ஆட்சேபனை இல்லை என சான்றும் வழங்கப்பட்டுள்ளது எனவும், எனவே மேற்படி இடத்தில் சிலை அமைக்கலாம் என தெரிவித்துள்ளார். நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் பரிந்துரையின் அடிப்படையில், மேற்காணும் இடத்தில் பெரியார் சிலை அமைத்திடலாம் எனத் தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காணும் சிலை அமைத்தல் குறித்து நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளதன் அடிப்படையில், அரசு ஆணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.98–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வேதாரண்யம் நகராட்சி, இராஜாஜி பூங்காவில் தந்தை பெரியாரின் வெண்கலத்தினாலான முழு உருவச் சிலை அமைக்க அனுமதி அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், வேதாரண்யம் நகர்மன்றம் இது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், வேதாரண்யம் வட்டம், வேதாரண்யம் நகராட்சியில் உள்ள இராஜாஜி பூங்காவில், தந்தை பெரியாரின் வெண்கலத்தினாலான முழு உருவச் சிலையை, அரசு ஆணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.98–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிறுவ, வேதாரண்யம் தந்தை பெரியார் சிலை அமைப்புக் குழுவிற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம்.
நகராட்சி ஆணையர், வேதாரண்யம் நகராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.

**<u>நகல்:</u>**
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
அரசுச் செயலளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இ.கோ/ உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**